1987 நவம்பர் 13]

திருவொற்றியூர்—பொன்னேரி பஞ்செட்டி நெடுஞ்சாலையில் பாலம் கட்டுதல்.

100—(*வினா எண் 11850) திரு. கே. பி. கே. சேகர் என்கிற கே. பி. குலசேகரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை திருவொற்றியூர்—பொன்னேரி பஞ்சட்டி நெடுஞ்சாலையில் வைக்காடு என்னும் இடத்தில் பாலம் கட்டும் பணி பாதியில் நிறுத்தப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மேற்கண்ட பாலப் பணிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகளை சீக்கிரத்தில் முடிக்க துரித மான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை சிப்காட் அருகில் ரயில்வே மேம்பாலம்.

101—(*வினா எண் 13103) திரு. ஜே. முகமது கனி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை - திருச்சி செல்லும் சாலையில் புதுச் கோட்டை சிப்காட் அருகில் ரயில்வே மேம்பாலம் கட்ட அரசிட திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.